# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 சித்திரை 29 திங்கட்கிழமை 12.05.2025 கதிர் 192



யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு -
யாழ் முற்றம்
Yarl Muttram
Youtube Channel




## முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் சிரமதானம்






முள்ளிவாய்க்கால் நினைவு வாரம் ஆரம்பமாகியுள்ள நிலையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை முள்ளிவாய்க்கால் மக்களோடு இணைந்து யாழ். பல்கலைக்கழக மாணவர்களால் முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில்சிரமதானப்பணி முன்னெடுக்கப்பட்டது.

# தையிட்டி விகாரைக்கு எதிராகப் போராட்டம்

## பெருமளவான பொலிஸார் குவிப்பு



யாழ்ப்பாணம், மே 12
சட்டவிரோத தையிட்டி விகாரைக்கு எதிராக பௌர்ணமி தினமான இன்று திங்கட்கிழமை போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

7

## யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர்களால் வல்வெட்டித்துறையில் முள்ளிவாய்க்கால் கஞ்சி

யாழ்ப்பாணம், மே 12
முள்ளிவாய்க்கால் இனப் படுகொலையை நினைவுகூர்ந்து யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர்களால் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டது.

7






## தையிட்டியிலும் முள்ளிவாய்க்கால் கஞ்சி

யாழ்ப்பாணம், மே 12
யாழ். தையிட்டி சட்டவிரோத விகாரைக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டது.

தையிட்டி பகுதியில் சட்டவிரோதமான முறையில் அமைக்கப்பட்டுள்ள விகாரையை அகற்றக் கோரி

7



## வெசாக் அலங்காரத்தில் ஈடுபட்ட சிறுமி மின்சாரம் தாக்கி மரணம்!



களுத்துறை, மே 12
வெசாக் பண்டிகையை முன்னிட்டு தனது குடும்பத்தினருடன்இணைந்து வீட்டை அலங்கரித்துக் கொண்டிருந்த சிறுமி ஒருவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் களுததுறை, மொரகஹஹேன பிரதேசத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்றுள்ளது.

9 வயதுடைய

7

## வெசாக் தினத்தை முன்னிட்டு யாழில் 20 கைதிகள் விடுதலை



யாழ்ப்பாணம், மே 12
வெசாக் தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் இருந்து 20 கைதிகள் இன்று ஞாயிற்றுக்கிழமைவிடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

வெசாக் பண்டிகையை முன்னிட்டு

7


- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# சிவனொளிபாதமலை பருவகாலம் இன்றுடன் நிறைவு



கொழும்பு, மே .12

வெசாக் தினமான திங்கட்கிழமை(12), அன்று சிவனொளிபாத மலை மேல் தளத்தில் பல விசேட நிகழ்வுகள் நடைபெறும் என சிவனொளிபாதமலை விகாராதிபதி பெங்கமுவே தமிமதின்ன தேரர் தெரிவித்தார்.

நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து ஏராளமான மக்கள் வந்து, அதில் கலந்துக் கொள்வதாகவும் அவர் கூறினார்

மேலும் 2024ஃ2025 சிவனொளிபாத மலை யாத்திரை பருவகாலம் திங்கட்கிழமை(12) நள்ளிரவுடன் முடிவடையும் என்றும் தெரிவித்தார். (ஐ)



# நாடு முழுவதும் வெசாக் விழிப்புணர்வு

கொழும்பு, மே .12 வெசாக் பண்டிகைக் காலத்தில் நாடு முழுவதும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் சோதனைகளை மேற்கொள்ளவுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகாரசபை அறிவித்துள்ளது.

வெசாக்கின் போது பொதுவாகப் பயன்படுத்தப்படும் அடபிரிகர, மதப் பிரசாதங்கள், தூபக் குச்சிகள், அலங்காரப் பொருட்கள் மற்றும் மின்சார பல்புகள் போன்ற விற்பனையாளர்கள் மற்றும் பொருட்களுக்கு சிறப்பு கவனம் செலுத்தப்படும்.

தேசிய வெசாக் கொண்டாட்டங்களுக்கு ஏற்ப நுவரெலியா மாவட்டத்திலும் ஒரு சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்படும். (ஐ)

# ஹக்கீம்–பாக். உயர் ஸ்தானிகர் சந்திப்பு

கொழும்பு, மே .12

இலங்கைக்கான பாகிஸ்தான் உயர் ஸ்தானிகர் (ஓய்வுபெற்ற)மேஜர் ஜெனரல் பஹீம் உல் அஸீஸ், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம்மை அவரது இல்லத்தில் வைத்து சென்ற வாரம் சந்தித்து உரையாடியுள்ளார்.

இதில், கட்சியின் செயலாளரும், பாராளுமன்ற உறுப்பிருமான, ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பரும் கலந்துக்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)





# கொழும்பு மேயர் பதவிக்கு இழுபறி



கொழும்பு, மே .12

கொழும்பு மாநகர சபையில் ஆட்சி அதிகாரத்தை நிலைநாட்டுவதற்காக உறுப்பினர்களை தெரிவு செய்வதற்காக தேசிய மக்கள் சக்தி கட்சியும் எதிர்க்கட்சி அரசியல் கட்சிகளும் இரகசிய கலந்துரையாடல்களை ஆரம்பித்துள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஆளும்கட்சியை ஸ்தாபிப்பதை ஆதரித்தால், ஒவ்வொரு அரசியல் கட்சியும் பல்வேறு பதவிகள் மற்றும் சலுகைகளை வழங்குவதாக உறுதியளித்து வருவதாகவும் அறியப்படுகிறது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, கொழும்பு மாநகர சபையின் அதிகாரத்துடன் மக்கள் சக்தி நிறுவப்படும் என்று கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரகுமான் தெரிவித்தார்.

பெரும்பான்மையான எம்.பிக்கள் தங்கள் கட்சியை வென்றுள்ளதால், அந்த ஆட்சி அதிகாரத்தை நிறுவுவதற்கு அரசாங்கத்திற்கு முழு உரிமை உள்ளது என்றும் கட்டுப்பாட்டைப் பெற தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும் என்று தேசிய மக்கள் சக்தி கூறுகிறது.

இதற்கிடையில், ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் இணைந்து செயற்பட ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் ஒருவர் தயக்கம் காட்டுவதால், கொழும்பு மாநகர சபையில் எதிர்க்கட்சிகள் அதிகாரத்தை அமைப்பதில் தடை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவும் ஆட்சியை அமைத்தால், எதிர்காலத்தில், வரவிருக்கும் முக்கிய தேர்தல்களிலும் அத்தகைய சமரசத்திற்கான கோரிக்கைகள் விடுக்கப்படலாம். எனவே, அதை ஆரம்பத்திலேயே தடுக்க வேண்டும் என்று சில தலைவர்கள் கருதுவதாகப் புரிந்து கொள்ளப்படுகிறது.

இந்த சூழ்நிலையில், கொழும்பு மாநகர சபையில் எதிர்க்கட்சி ஆட்சியைக் கைப்பற்றும் அபாயம் இருப்பதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன. கொழும்பு மாநகர சபையில் தேசிய மக்கள் சக்தி 48 உறுப்பினர்களை வென்ற அதே வேளையில், பிரதான எதிர்க்கட்சியான சமகி மக்கள் சக்தி அறுபத்தொன்பது உறுப்பினர்களை வென்றது. கொழும்பு மாநகர சபையில் உறுப்பினர் எண்ணிக்கையின் அடிப்படையில், எதிர்க்கட்சியே அதிகாரத்தை நிலைநாட்ட அதிக ஆற்றலைக் கொண்டுள்ளதாக அரசியல் விமர்சகர்கள் கூறுகின்றனர்.

இதற்கிடையில், ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் பிற கட்சிகளுடன் இணைந்து கொழும்பு மாநகர சபையில் அதிகாரத்தை நிலைநாட்ட ஏற்கெனவே விருப்பம் தெரிவித்துள்ளது.

இந்த நாட்டிலுள்ள நகராட்சி மன்றங்களில், சிறப்பு கவனத்தை ஈர்த்தது கொழும்பு நகராட்சி மன்றமாகும்.

கொழும்பு நகரின் பெரும்பாலான விவகாரங்களைக் கட்டுப்படுத்தும் கொழும்பு மாநகர சபையில் அதிகாரத்தைப் பெறுவது ஒரு பெரிய அரசியல் சக்தியாக இருப்பதால், பல அரசியல் கட்சிகள் சிறிது காலமாக அங்கு அதிகாரத்தைப் பெற ஆர்வமாக உள்ளன. (ஐ)

# 300மப திருக்கை மீன் வலையில் சிக்கியது



காத்தான்குடி , மே .12

காத்தான்குடி ஏத்துக்கால் கடலில் 300 கிலோ கிராம் நிறையுடைய மீன் ஒன்று காத்தான்குடி மீனவர்களின் வலையில் சிக்கி உள்ளது

ஞாயிற்றுக்கிழமை மாலை காத்தான்குடி கடலில் மீன் பிடிக்கச் சென்ற மீனவர்களின் வலையில் இந்த 300 கிலோ கிராம் எடை கொண்ட திருக்கை மீன் பிடிக்கப்பட்டுள்ளதாக மீனவர்கள் தெரிவித்தனர்.

# வர்த்தக நிலையத்தில் தீ பரவல்




மட்டக்களப்பு , மே .12

மட்டக்களப்பு காத்தான்குடியில் வர்த்தக நிலையமொன்றின் மீது ஞாயிற்றுக்கிழமை அன்று இரவு ஏற்பட்ட தீப்பரவலினால் குறித்த வர்த்தக நிலையத்தின் உட்பகுதி எரிந்து சேதமடைந்துள்ளது.

புதிய காத்தான்குடி பௌஸிமாவத்தை(ரெலிகொம்) வீதியிலுள்ள வர்த்தக நிலையத்தின் மீது இந்த தீப்பரவல் ஏற்பட்டுள்ளது.

இதையடுத்து காத்தான்குடி நகரசபை தீஅணைக்கும் இயந்திரம் மட்டக்களப்பு மாநகரசபையின் தீ அணைக்கும் இயந்திரம் வரவழைக்கப்பட்டு பொதுமக்களின் உதவியுடன் தீ அணைக்கப்பட்டு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது

பிரபல வர்த்தகரான நசீலாஅக்பர்ஹாஜியாருக்கு சொந்தமான இந்தவர்த்தக நிலையத்திற்கு ஐம்பது இலட்சம் ரூபாய் நஷ்டம்இந்த தீப் பரவலினால் ஏற்பட்டுள்ளது தீப்பரவலுக்கான காரணங்கள் குறித்து காத்தான்குடி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# பெருந்தொகையான பீடி இலைகள் மீட்பு



கொழும்பு, மே .12

புத்தளம், கற்பிட்டி - முகத்துவாரம் கடற் பகுதியில் இருந்து ஒருதொகை பீடிஇலைகள்சனிக்கிழமை (10) மீட்கப்பட்டுள்ளன. மேலும், இக்கடத்தலுடன்தொடர்புடையவர்கள்என்ற சந்தேகத்தின் பேரில் நால்வர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வடமேற்கு கடற்படை கட்டளையின் விஜய நிறுவன கடற்படை சிறப்புத் தேடுதல் மற்றும் மரைன் படையினர் குறித்த கடற்பிரதேசத்தில் முன்னெடுத்த தேடுதல் நடவடிக்கையின் போது அங்கு சந்தேகத்திற்கு இடமான முறையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இரண்டு டிங்கி இயந்திர படகுகளை சோதனையிட்டுள்ளனர்.

இதன்போது, குறித்த டிங்கி இயந்திர படகுகளில் இருந்து 14 உரப் பைகளில் அடைக்கப்பட்ட நிலையில் 497 கிலோ கிராம் பீடி இலைகள் மீட்கப்பட்டுள்ளதுடன், சந்தேக நபர்கள் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த நடவடிக்கையின் மூலம் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் 28 மற்றும் 41 வயதுடைய கற்பிட்டி, ஆனவாசலை மற்றும் மாம்புரி ஆகிய பிரதேசங்களில் வசிப்பவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மேலும், கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள், அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட பீடி இலைகள் மற்றும் இரண்டு டிங்கி இயந்திர படகுகள் என்பன மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக புத்தளம் மதுவரி விசேட பிரிவினரிடம் ஒப்படைத்துள்ளதாகவும் கடற்படையினர் மேலும் குறிப்பிட்டனர். (ஐ)

# ‘மின்சார சபைத் தலைவர் இராஜினாமா செய்யவில்லை’



கொழும்பு, மே .12

இலங்கை மின்சார சபையின் தலைவர் கலாநிதி திலக் சியம்பலாபிட்டிய இராஜினாமா தொடர்பாக ஊடகங்களில் வெளியான அறிக்கைகளை வலு அமைச்சின் ஊடகப் பிரிவு மறுத்துள்ளது.

தனிப்பட்ட காரணங்களுக்காக வெளிநாட்டு செல்லத் திட்டமிட்டுள்ளமை காரணமாக தனது விடுப்பு தொடர்பாக அறிவிக்கும் கடிதத்தை ஜனாதிபதியிடம் சியம்பலாபிட்டிய கையளித்ததாக அமைச்சின் சிரேஷ்ட அதிகாரியொருவர் கூறியுள்ளார். (ஐ)

# தமிழகத்தை சிங்கப்பூராக மாற்றுவோம்: அன்புமணி



அருந்ததியர்களுக்கு 3 முஸ்லிம்களுக்கு 3.5 வன்னியர்களுக்கு 13.1 சதவீதம் உள் ஒதுக்கீடு வழங்க, ஜனார்த்தனன் கமிஷன் பரிந்துரை செய்தது. அப்போதைய முதல்வர் கருணாநிதி, அருந்ததியர்களுக்கும், முஸ்லிம்களுக்கும் உள் ஒதுக்கீடு வழங்கினார். வன்னியர்களுக்கு வழங்கவில்லை.

அவர்களுக்கு கல்வி, வேலை வாய்ப்பில் இட ஒதுக்கீடு வழங்கி, அவர்களை முன்னேற்ற வேண்டும் என்பதற்காக, 45 ஆண்டு காலமாக ராமதாஸ் உழைக்கிறார்.

மிகவும் பிற்படுத்தப்பட்டோர் சமுதாயத்தில், ஒதுக்கப்பட்ட 20 சதவீதத்தில் வன்னியருக்கு 10 அல்லது 12 சதவீதம் ஒதுக்கீடு செய்வதாக கூறுகின்றனர். ஆனால், வன்னியர்களுக்கு உரிய இடம் கிடைப்பதில்லை. தமிழக காவல் துறையில், டி.ஜி.பி., - ஏ.டி.ஜி.பி., ஐ.ஜி., போன்ற உயர் அதிகாரிகள் பொறுப்பில், 109 பேர் உள்ளனர். அவர்களில் ஒருவர் தான் வன்னியர். இது சமூக அநீதி.

பின் தங்கியுள்ள வன்னியர் சமுதாயத்தை முன்னேற்ற, முதல்வர் ஸ்டாலினிடம் எந்த ஒரு திட்டமிடலும் இல்லை. அதைபற்றி அவருக்கு கவலையும் இல்லை. நான் வன்னியர் சமுதாயத்தினருக்கு மட்டும் குரல் கொடுக்கவில்லை.

பின்தங்கியுள்ள அனைத்து சமுதாயத்தினருக்கும் குரல் கொடுக்கிறேன். வன்னியர்கள் உள்ளிட்ட அனைத்து பின் தங்கிய சமுதாயத்தினருக்கும், இட ஒதுக்கீடு கிடைக்க வேண்டும். நம் முக்கிய கோரிக்கை, தமிழகத்தில் ஜாதிவாரி கணக்கெடுப்பு நடத்த வேண்டும். இதை செய்வதாக, மத்திய அரசு அறிவித்திருக்கிறது. அதற்காக, பிரதமர் மோடிக்கு நன்றி. இது ராமதாசுக்கு கிடைத்த வெற்றி. இவ்வளவு காலமாக கோரிக்கைகளை நிறைவேற்ற, நாம் மனு கொடுத்தோம்.

இனி மனு வாங்குகிற சமுதாயமாக மாற வேண்டும். அதற்கான காலத்தை உருவாக்க வேண்டும். முதல்வர் ஸ்டாலினுக்கு எல்லா அதிகாரமும் உள்ளது. ஆனால், மனசு இல்லை.

நாட்டின் வளர்ச்சி, அடுக்குமாடி கட்டடங்கள், உள்கட்டமைப்பு வசதி மட்டுமல்ல் கல்வி அறிவு கொடுக்க வேண்டும். வேலைக்கு செல்ல வேண்டும் அது தான் வளர்ச்சி.

நான் முதல்வராக இருந்திருந்தால், எந்த சமுதாயத்தினர், எந்த நிலையில் இருக்கின்றனர் என்ற கணக்கெடுப்பை நடத்த முதல் கையெழுத்தை போட்டிருப்பேன்.

சென்னைக்கும், கன்னியாகுமரிக்கும், 10 வழி சாலை போடுவேன். விவசாயிகள் நிலத்தை தந்தால், திட்டத்தில் பங்குதாரராக சேர்ப்பேன். மாதாமாதம் பணம் வங்கி வாயிலாக வந்து சேரும். இப்படி பல திட்டங்கள் எங்களிடம் உள்ளன.

அதிகாரத்தை தாருங்கள். தமிழகத்தை சிங்கப்பூருக்கு நிகராக மாற்ற முடியும். தமிழகத்தில் உள்ள பிரச்னைகளை சொல்ல முடியும் தீர்வும் காண முடியும். சமூக நீதியை நிலைநாட்ட வாய்ப்பு தாருங்கள்.

வரும் காலம் நம் காலம். யார் பின்னாலும் செல்லாதீர்கள். என் பின்னால் வாருங்கள். உங்களுக்காக வாழ்கிறேன். தமிழகத்தை நாம் ஆள வேண்டிய காலம் வந்து விட்டது. இவ்வாறு அவர் பேசினார். (ஐ)

# பட்டியலின மக்களுக்கு மேலும் 2 % இடஒதுக்கீடு



*தமிழகத்தில், 69 சதவீத இடஒதுக்கீட்டை பாதுகாக்க, மாநில அரசு தனியாக ஜாதிவாரி கணக்கெடுப்பு நடத்த வேண்டும்*

*ஜாதிவாரி கணக்கெடுப்பு நடத்த உத்தரவிட்ட பிரதமர் மோடிக்கு நன்றி. தொடர் போராட்டம் வாயிலாக, அதை சாத்தியமாக்கிய பா.ம.க., நிறுவனர் ராமதாசுக்கு நன்றி*

*உச்ச நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில், வன்னியர்களுக்கு உடனடியாக உள்ஒதுக்கீடு வழங்க வேண்டும்*

*தமிழகத்தில் உள்ள அனைத்து சமுதாய மக்களுக்கும், அவர்களின் மக்கள் தொகைக்கு ஏற்ப இடஒதுக்கீடு வழங்க, தமிழக அரசு முன்வர வேண்டும்*

*தமிழகத்தில் உள்ள பட்டியலின மக்களின் எண்ணிக்கையை கருத்தில் வைத்து, அவர்களுக்கான இடஒதுக்கீட்டை மேலும் 2 சதவீதம் உயர்த்தி வழங்க வேண்டும் பிற்படுத்தப்பட்ட மக்களின், சமூக, பொருளாதார நிலையை உறுதிப்படுத்த, தனியார் துறைகளில் இடஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்த வேண்டும்*

*உச்ச நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்ற நீதிபதி நியமனங்களில், இடஒதுக்கீடு முறையை கட்டாயமாக்க வேண்டும் தமிழகத்தில் உள்ள உள்ளாட்சி அமைப்புகளில், பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு, 50 சதவீத இட ஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்த வேண்டும்*

*கல்வி, தனிநபர் வருமானத்தை அதிகரிக்க, வட மாவட்டங்களில் சிறப்பு திட்டத்தை அரசு செயல்படுத்த வேண்டும் தமிழகத்தில் முழு மதுவிலக்கை நடைமுறைப்படுத்தவும், போதை பொருட்களை ஒழிக்கவும், அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இவை உட்பட, 14 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. (ஐ)*



# சென்னையில் ரயில் மோதி கல்லூரி மாணவர்கள் 2 பேர் உயிரிழப்பு

சென்னையில் மின்சார ரயில் மோதி, கல்லூரி மாணவர்கள் 2 பேர் உயிரிழந்த சம்பவம் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

சென்னை பரங்கிமலை ரயில் நிலையம் அருகே, மின்சார ரயில் சென்று கொண்டிருந்தது. அப்போது, அந்த வழியாக வந்த கல்லூரி மாணவர்கள் இரண்டு பேர் மொபைல்போன் பேசிக்கொண்டே தண்டவாளத்தைக் கடக்க முயற்சி செய்தனர். அப்போது ரயில் மோதி கல்லூரி மாணவர்கள் 2 பேரும் உயிரிழந்தனர்.

சம்பட இடத்திற்கு விரைந்த போலீசார் உடலை கைப்பற்றி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார். இறுதி ஆண்டு கல்லூரி மாணவர்கள் முகமது நபூல், சபீர் அகமது உயிரிழந்தது என்பது போலீசார் விசாரணையில் தெரியவந்தது.

மொபைல்போன் பேசிக்கொண்டே மாணவர்கள் தண்டவாளத்தைக் கடந்த போது உயிரிழந்த சம்பவம், தண்டவாளத்தை கடப்பது எத்தகைய ஆபத்தை விளைவிக்கும் என்பதை உணர்த்துவதாக உள்ளது. (ஐ)

# மாற்றுத்திறனாளிகள் எதிர்ப்பால் டி.என்.பி.எஸ்.சி., நிபந்தனை ரத்து




குரூப் - 4 தேர்வுக்கு விண்ணப்பிக்கும் மாற்றுத்திறனாளிகள், கூடுதல் சான்றிதழ்களை பதிவேற்றம் செய்ய வேண்டாம்' என, தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் அறிவித்துள்ளது.

குரூப் - 4 தேர்வுக்கு விண்ணப்பிக்கும் மாற்றுத்திறனாளிகளில், மாற்று எழுத்தர் கோரும் விண்ணப்பதாரர்கள், மாற்றுத்திறனாளி சான்றிதழுடன், அங்கீகரிக்கப்பட்ட அரசு தலைமை மருத்துவர், அறுவை சிகிச்சை நிபுணர் அல்லது அரசு சுகாதார தலைமை கண்காணிப்பாளரிடம் பெற்ற மருத்துவச் சான்றிதழை பதிவேற்றம் செய்ய வேண்டும் என கடந்த மாதம் அறிவித்தது.

அதைத்தொடர்ந்து தேர்வாணையம், மருத்துவ ஆணையத்தில் பெறப்பட்ட சான்றிதழை பதிவேற்றம் செய்ய வேண்டாம் பழைய முறைப்படி மாற்றுத்திறனாளி சான்றிதழை பதிவேற்றம் செய்தால் போதுமானது என்று தெரிவித்து உள்ளது.

மாற்று எழுத்தர் கோரும் மாற்றுத்திறனாளிகள், மாற்றுத்திறனாளி சான்றிதழை, ஆன்லைனில் விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் போது பதிவேற்றம் செய்ய வேண்டும். கூடுதலாக வேறு எந்த சான்றிதழையும் பதிவேற்றம் செய்ய வேண்டியதில்லை. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது. (ஐ)




# எது அழகு?

அழகுஎன்பதுஒவ்வொருவர் கண்ணோட்டத்திலும் வேறுபடும். ஒருவருக்கு மிக அழகாகத் தெரியும் ஒன்று, மற்றவருக்கு மிகச் சாதாரணமாகத் தெரியும். லைலாவின் அழகை மஜ்னுவின் கண்ணால்தானே காணமுடியும்?

என்னவோ குண்டானவர்கள் எல்லாம் தின்றே தீர்ப்பவர்கள் என்று ஒரு எண்ணம் பரவிக் கிடக்கிறது. அவர்களுக்கு உடல் ரீதியாக ஏதேனும் பிரச்சினைகள் இருக்கலாம் என்ற எண்ணம் ஏனோ யாருக்கும் வருவதில்லை. நிறைய பெண்கள் எல்லா வேலைகளையும் இழுத்துப் போட்டுக் கொண்டு செய்தாலும், உணவைக் குறைத்தாலும், உடல்வாகால் எடைகுறையாமல் இருக்கிறார்கள்.

ஆனால் நமது சமூகத்தில் அழகு என்பதன் வரையறையே வேறு. சிவந்த தோல் என்பதுதான் இங்கு அழகு. கறுப்பு நிறத்தை அபசகுனம் என்று ஒதுக்கித்தானே வைத திருக்கிறோம்? இந்த வெள்ளை மனப்பான்மையுடன் இருக்கும் நாம்தான், ஆபிரிக்க-அமெரிக்க நிறவெறிக் கொள்கையை நரம்பு புடைக்க விமர்சிக்கிறோம். விளம்பரங்கள் கூட சிவப்பு நிறமுடைய பெண்கள் தான் தன்னம்பிக்கையுடன் திகழ்வார்கள் என்று கூவுகின்றன. அதை நம்பி சிவப்பழகு க்ரீம்களைத் தேய்த்து ஐந்து நிமிடங்களில் தன் நிறம் மாறி விட்டதா என்று இன்னும் கண்ணாடி பார்க்கும் பெண்கள் இருக்கிறார்கள்.

நம் நாட்டில் கறுப்பு நிறமுடைய பெண்கள் எத்தகைய சாதனைகள் செய்தாலும், அவை அவ்வளவு கொண்டாடப்படுவது இல்லை என்பதே கசப்பான உண்மை. கறுப்புப் பெண்கள் எதற்கும் ஆசைப்பட்டுவிடக் கூடாது. “இந்த மூஞ்சிக்கு எதுக்கு இது?..”, “இந்த கலர் உனக்கு செட் ஆகாது..”, “இந்த கலரா இருந்துட்டு.. இந்த ட்ரஸ் போட ஆசைப்படலாமா?..” இதுபோன்ற நெகட்டிவ் கமெண்ட்களைத் தான் அவர்கள் எதிர்கொள்ள நேர்கிறது.

திருமணத்திற்குப் பெண் பார்க்கும் நிகழ்வுகளில் கூட, பெண் நல்ல நிறமாக இருக்க வேண்டும் என்பதே முதல் காரணியாக வைக்கப்படுகிறது. கறுப்பே அழகு.. காந்தலே ருசி.. என்பது வெறும் ஏட்டுச் சுரைக்காயாகத்தான் இருக்கிறது. தனித்திறமைகள் ஏதுமில்லாமல் வெறும் சிவப்பு நிறத்தை மட்டும் வைத்து வாய்ப்பு கொடுக்கப்படும் பெண்கள், தங்களது நேரத்தை வீணடிப்பதோடு, திறமையுள்ள இன்னொருவரின் இடத்தையும் பறித்து அவர்களது முன்னேற்றத்தையும் தடுக்கிறார்கள். ஆனால் பெண்களுக்கு என்றிருக்கும் சிவப்பு நிற அளவுகோல் எதுவும் ஆண்களுக்கு இல்லை. “ஆம்பிளை எப்படியிருந்தா என்ன?..”, “ஆம்பளைக்கு எதுக்கு அழகு?..” என்று சாதாரணமாகக் கடந்து போய்விடுகிறார்கள். நிறம் குறைவாக(?) இருக்கும் காரணத்தாலேயே நிறையப் பெண்கள் முதிர்கன்னிகளாக ஜன்னல் கம்பிகளோடு குடித்தனம் நடத்துகிறார்கள். இல்லையென்று சண்டைக்கு வராதீர்கள். குறைந்த சதவீதத்திலாவது இத்தகைய பெண்கள் இருக்கிறார்கள்.

பருமனான பெண்கள் படும்பாடு சொல்லி மாளாது. ஜோக்ஸ் (?), மீம்ஸ் என்று படுத்தி எடுக்கிறார்கள். ஒல்லியாக இருந்தால் தான் அழகு என்று நேரடியாகவும், மறைமுகமாகவும் நமது மூளையின் ஒரு மூலையில் திணித்துக் கொண்டே இருக்கிறார்கள். இங்கு அழகுக்குக் கொடுக்கப்படும் முக்கியத்துவம் ஆரோக்கியத்திற்குக் கொடுக்கப்படுவதில்லை. திரைப்படங்களில் கூட குண்டான பெண்கள் நகைச்சுவை என்ற பெயரில் அவமானப்படுத்தப்படுகிறார்கள். உடல் பருமனைக் காட்டி அவர்களுக்கு நல்ல உடைகள் மறுக்கப்படுகிறது. விரும்பிய உணவு விலக்கப்படுகிறது. கேலிப் பொருளாகவே அவர்கள் சமூகத்தில் பார்க்கப்படுகிறார்கள். அவர்களுக்கு இருக்கும் நல்ல எழுத்துத் திறமை, பேச்சாற்றல், ஓவியம் வரையும் திறன் போன்ற எண்ணற்ற விஷயங்கள், கவனிப்பாரின்றி முடக்கப்படுகின்றன.

என்னவோ குண்டானவர்கள் எல்லாம் தின்றே தீர்ப்பவர்கள் என்று ஒரு எண்ணம் பரவிக் கிடக்கிறது. அவர்களுக்கு உடல் ரீதியாக ஏதேனும் பிரச்சினைகள் இருக்கலாம் என்ற எண்ணம் ஏனோ யாருக்கும் வருவதில்லை. நிறைய பெண்கள் எல்லா வேலைகளையும் இழுத்துப் போட்டுக் கொண்டு செய்தாலும், உணவைக் குறைத்தாலும், உடல்வாகால் எடைகுறையாமல் இருக்கிறார்கள்.

‘ஒல்லியானவர்களுக்கு நிறைய தன்னம்பிக்கை இருக்கும். அவர்களுக்கு அழகான ஆண் நண்பன் கிடைப்பான். அவர்கள் உடனே வேலை கிடைத்து ஸ்லோமோஷனில் ஒரு ஃபைலோடு நடந்து வருவார்கள்’- இப்படித்தான் ஊடகங்களில் வரும் விளம்பரங்கள் நமது மூளையைச் சலவை செய்து வைத்திருக்கின்றன. ஒரு காலத்தில் பெண்கள் கொஞ்சம் ‘பூசினாற்போல’ இருப்பது அழகென்று சொன்னார்கள். இன்றோ ‘சைஸ் ஜீரோ’ தான் அழகென்று சொல்லுகிறார்கள். எப்படி இருந்தாலும் ஆண்களுக்குப் ‘பிடித்த’ மாதிரித்தான் பெண்கள் தன்னை மாற்றிக் கொள்ள வற்புறுத்தப்படுகிறார்கள்.

பொதுவெளியில் மட்டுமல்ல, வீட்டிலும் கூடப் பருமனான பெண்கள் அவமானப்படுத்தப்படுகிறார்கள். மாற்றி மாற்றி எந்நேரமும் தனது உடலைப் பற்றிய சிந்தனையிலேயே ஒரு பெண் ஆழ்த்தப்படுகிறாள். ஒல்லியாக இருந்தால் கொஞ்சம் உடம்பு போட, குண்டாக இருந்தால் இளைக்க என்று அடுத்தவர்களின் இலவச அறிவுரைகள் ஏராளமாகக் கிடைக்கும். இதைப் பயன்படுத்தி உடம்பைக் குறைக்க வைக்கும் நிலையங்கள் பெருகி வருகின்றன.

மூலிகைப் பவுடரை அருந்தி உடலைக் குறைக்கும் முயற்சியில் பக்கவிளைவுகளைப் பரிசாகப் பெற்றுக் கொண்ட நிறைய பேர் உள்ளனர்.

ஆண் உடலைப் போன்றதல்ல பெண்ணின் உடல். அதை நமது விருப்பப்படி ஏற்றி இறக்க முடியாது. பிரசவம், மாதவிடாய் உள்ளிட்ட காரணங்களாலும், ஹோர்மோன் மாற்றங்களாலும் பெண்ணின் உடல் மாற்றங்களுக்கு உட்பட்டே தீரும். ஆனால் பிரசவத்தினால் வயிறு பெரிதான பெண்கள் இங்கு கொண்டாடப்படுவதில்லை. வெளிநாட்டுப் பெண்களோடு உடல்ரீதியாக ஒப்பிடப்பட்டு கிண்டலடிக்கப்படுகிறார்கள். அவர்களது உணவுப் பழக்கம் வேறு. நம்முடையது வேறு என்ற சின்ன விஷயம் கூட ஆண்களின் மூளையில் உறைப்பது இல்லை. அவர்களின் பார்வையில் ஒல்லியாக இருப்பவர்கள் தான் ‘அழகிகள்’ என்றால், அவர்களது பார்வையின் கோணம் எவ்வளவு தவறானது?

சிவந்த நிறம், வெளுத்த தோல், ஒல்லி உடம்பு.. இவையல்ல அழகு. இன்று நிறைய பேருக்கு கீழே உட்கார்ந்து சாப்பிட முடிவதில்லை. நாற்காலியில் உட்கார்ந்தே பழகிவிட்டதால், சிறிது நேரம் கீழே அமர முடிவதில்லை. கீழே அமர்ந்து, எழும்போது யார் துணையும் இன்றித் தானாகவே எழுவதுதான் ஆரோக்கியம். உடல் பருத்திருந்தாலும் நன்றாகக் குனிந்து நிமிர முடிந்தால், அதை விட அழகு எதுவுமில்லை. நோய்நொடி எதுவுமின்றி துறுதுறுவென்று இருப்பதுதான் பேரழகு.

நடிகைகள் நித்யா மேனன், வித்யா பாலன் போன்றோர், “குண்டான உடல் கேவலம் இல்லை. எண்ணங்களில் வேண்டும் அழகு. அழகுக்காக இல்லாமல் நமது நடவடிக்கைகளுக்காக, சிந்தனைகளுக்காக நம்மை விரும்புபவர்களுடன் நமது நட்பை வளர்த்துக் கொள்ள வேண்டும்”, என்று கூறியது அழகு என்ற சொல்லின் வரைவிலக்கணத்தை வேறு கோணத்தில் காட்டுகிறது.



# நேரடி பேச்சுவார்த்தைக்கு தயார்: ரஷ்ய அதிபர் புடின் அழைப்பை ஏற்றுக்கொண்டார் உக்ரைன் அதிபர்

"போர் நிறுத்தம் தொடர்பாக, துருக்கியில் ரஷ்ய அதிபர் புடினை சந்தித்து நேரடி பேச்சுவார்த்தை நடத்த தயார்" என உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி தெரிவித்துள்ளார்.

ரஷ்யா- உக்ரைன் இடையே போர் நடந்து வரும் நிலையில், அதை நிறுத்த அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப், இரு தரப்பிலும் தீவிர பேச்சுவார்த்தை நடத்தி வருகிறார். இந்நிலையில் நேற்று, "அமைதியை நோக்கி செல்வதற்கான தீவிர பேச்சுவார்த்தை நடத்த தயார். மே 15ம் தேதி பேச்சுவார்த்தை நடத்தலாம்" என ரஷ்ய அதிபர் புடின் அறிவித்தது இருந்தார்.

இந்நிலையில், ரஷ்ய அதிபர் புடின் அழைப்பை உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி ஏற்றுக்கொண்டார். இது குறித்து, ஜெலன்ஸ்கி வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது: ராஜதந்திரத்திற்குத் தேவையான அடிப்படையை வழங்க, நாளை முதல் தொடங்கும் முழுமையான மற்றும் நீடித்த போர்நிறுத்தத்திற்காக நாங்கள் காத்திருக்கிறோம்.

மே 15ம் தேதி வியாழக்கிழமை துருக்கியில் புடினுக்காக நான் காத்திருப்பேன். தனிப்பட்ட முறையில் பேச்சுவார்த்தை நடத்துவோம். இந்த முறை சாக்குப்போக்குகளைத் தேட மாட்டார் என்று நம்புகிறேன். இவ்வாறு அவர் கூறியுள்ளார். (ஐ)

# ஆப்ரிக்காவில் கனமழையால் 62 பேர் பலி மாயமான 50 பேரை தேடும் பணி தீவிரம்



ஆப்ரிக்க நாடான காங்கோ ஜனநாயக குடியரசில் கனமழை காரணமாக ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் சிக்கி 62 பேர் உயிரிழந்தனர். மேலும் மாயமான 50 பேரை தேடும் பணி தீவிரமாக நடந்து வருகிறது.

மத்திய ஆப்ரிக்க நாடான காங்கோ ஜனநாயக குடியரசில் கனமழை கொட்டி தீர்த்து வருகிறது. கிழக்கு மாகாணமான கிவுவில் மழை வெளுத்து வருகிறது. இதன் காரணமாக, நங்கன்ஜா நகரில் உள்ள டாங்கன்யிகா உள்பட பல ஏரிகள் நிரம்பியது. இதனால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் சிக்கி பலர் அடித்து செல்லப்பட்டனர்.

இதையடுத்து உள்ளூர் மக்களுடன் இணைந்து, மீட்பு படையினர் மீட்பு பணி மேற்கொண்டனர்.

இதுவரை வெள்ளப்பெருக்கில் சிக்கி 62 பேர் உயிரிழந்தனர். மேலும் 50 பேர் மாயமாகினர். அவர்களை தேடும் பணி நடந்து வருகிறது. வெள்ளப்பெருக்கு காரணமாக, மின்சாரம் மற்றும் தொலைபேசி இணைப்புகள் துண்டிக்கப்பட்டன. (ஐ)

# 580 நாட்களுக்குப் பிறகு இஸ்ரேல் ராணுவ வீரரை விடுவிக்கும் ஹமாஸ்




போர் நிறுத்த ஒப்பந்தத்தின் அடிப்படையில், 580 நாட்களுக்கும் மேலாக சிறை பிடிக்கப்பட்டுள்ள இஸ்ரேல் ராணுவ வீரரை ஹமாஸ் அமைப்பு விடுவிக்க முடிவு செய்துள்ளது.

இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீனத்தை மையமாகக் கொண்டு செயல்படும் ஹமாஸ் இடையே கடந்த 2 ஆண்டுகளுக்கு மேலாக போர் நடைபெற்று வந்தது. இஸ்ரேலுக்குள் புகுந்து கொலைவெறி தாக்குதல் நடத்திய ஹமாஸ் அமைப்பினர், நூற்றுக்கும் மேற்பட்டோரை பிணைக் கைதிகளாக பிடித்துச் சென்றனர்.

இதையடுத்து இஸ்ரேல் காசா மீதான படையெடுப்பை தொடங்கியது. இதில் பல்லாயிரக்கணக்கான பேர் உயிரிழந்தனர்.

அமெரிக்க அரசு நடத்திய பேச்சுவார்த்தையை தொடர்ந்து கடந்த ஜன.,19ம் தேதி இரு தரப்பினரிடையே போர் நிறுத்தம் அமலுக்கு வந்தது. இதன் ஒரு பகுதியாக, இருதரப்பிலும் சிறைபிடிக்கப்பட்ட பிணைக் கைதிகளை விடுவிப்பது என்று முடிவு செய்யப்பட்டது. அதன்படி, படிப்படியாக பிணைக் கைதிகள் விடுவிக்கப்பட்டனர்.

அந்த வகையில், ஹமாஸ் அமைப்பினரால் சிறைபிடிக்கப்பட்ட இஸ்ரேல் பாதுகாப்பு படை வீரரும், அமெரிக்க வம்சாவளியை சேர்ந்தவருமான ஈடன் அலெக்ஸாண்டர், 21, என்பவரை 580 நாட்களுக்குப் பிறகு விடுவிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா,கத்தார், எகிப்து மற்றும் ஹமாஸ் இடையே நடைபெற்ற 4 முனை பேச்சுவார்த்தைக்கு பிறகு அலெக்ஸாண்டரை விடுவிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. அநேகமாக அவர் நாளை மீண்டும் இஸ்ரேலிடம் ஒப்படைக்கப்படலாம்.

மத்திய கிழக்கு நாடுகளுக்கு அமெரிக்க அதிபர் டிரம்ப் சுற்றுப்பயணம் மேற்கொள்ள நிலையில், ஹமாஸ் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

இது குறித்து வாஷிங்டன் சிறப்பு அதிகாரி ஒருவர் கூறுகையில், 'இது ஒரு நேர்மறையான முன்னேற்றமாகும். மேலும் ஹமாஸ் வசம் உள்ள 4 அமெரிக்கர்களின் உடல்களை விடுவிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறோம்,' என தெரிவித்தார். (ஐ)

# போரில் வெற்றி பெற்றதாக பாக்., தம்பட்டம் 'ராணுவத்துக்கு நன்றி' என கொண்டாட்டம்

இரு நாடுகளுக்கு இடையே தற்காலிக போர் நிறுத்தம் மட்டுமே அறிவிக்கப்பட்ட நிலையில், போரில் வெற்றி பெற்றதாக கூறி, 'ராணுவத்துக்கு நன்றி தெரிவிக்கும் தினம்' என்ற பெயரில், பாகிஸ்தான் தம்பட்டம் அடித்து நேற்று கொண்டாட்டத்தில் ஈடுபட்டது.

ஜம்மு - -காஷ்மீரின் பஹல்காமில், 26 பேரை பாக்., பயங்கரவாதிகள் சுட்டுக் கொன்றனர். இதற்கு பழிவாங்கும் விதமாக, 'ஆப்பரேஷன் சிந்தூர்' என்ற ராணுவ நடவடிக்கையை துவங்கிய நம் நாடு, பாகிஸ்தானில் பயங்கரவாத முகாம்களை தகர்த்தது 100க்கும் மேற்பட்ட பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர்.

இதையடுத்து, இந்தியாவுடன் பாக்., ராணுவம் மோதலில் ஈடுபட்டதால், இரு தரப்பிலும் ஏவுகணை, ட்ரோன் தாக்குதல் தொடர்ந்தது. இந்தியா மீதான தாக்குதலுக்கு, 'இரும்பு சுவர்' என்ற பொருள்படும் வகையில் பாக்., பெயர் சூட்டியது.

மூன்று நாட்கள் நீடித்த இந்த தாக்குதலில், பாக்.,கில் இருந்து நீண்ட தொலைவு ஏவுகணைகள் ஏவப்பட்ட ஆறு முக்கிய விமானப்படை தளங்கள் மற்றும் இரண்டு ரேடார் மையங்களை நம் படையினர் நேற்று முன்தினம் காலையில் தகர்த்தனர்.

இதையடுத்து, பிற்பகலிலேயே போரை நிறுத்த பாக்., இறங்கி வந்தது. இதையடுத்து, தற்காலிக போர் நிறுத்தத்துக்கு இந்தியாவும் ஒப்புக்கொண்டது. ஆனால், இந்த போரில் வெற்றி பெற்று விட்டதாக பாக்., கூறி வருகிறது. அந்நாட்டு அரசு வானொலியான 'ரேடியோ பாகிஸ்தான்' வாயிலாக பிரதமர் ஷபாஸ் ஷெரீப்பின் செய்தி வாசிக்கப்பட்டது.

அதில், 'இந்தியாவின் ஆக்கிரமிப்புக்கு ஆப்பரேஷன் இரும்புச் சுவர் வாயிலாக தகுந்த பதிலடி கொடுத்த ராணுவத்துக்கு நன்றி தெரிவிக்கும் விதமாக நன்றி தினம், நாடு முழுதும் மே 11ல் கொண்டாட பிரதமர் ஷெரிப் அழைப்பு விடுத்துள்ளார்.

கடவுளுக்கும் பாக்., ராணுவத்தின் இணையில்லா துணிச்சலுக்கும் நன்றி செலுத்துவதோடு, போரில் உயிரிழந்தவர்களுக்காக சிறப்பு பிரார்த்தனை நடத்தும்படி, மத குருமார்களையும் கேட்டுக் கொண்டுள்ளார்' என கூறப்பட்டது.

இதன்படி, போரில் வெற்றி பெற்றதாக கூறி, பாகிஸ்தானில் நேற்று கொண்டாட்டங்கள் நடந்தன. பாக்.,கின் பஞ்சாப், சிந்து உள்ளிட்ட கிழக்கு பகுதியில் உள்ள மாகாணங்களில் பாக்., கொடிகளை ஏந்தியபடி பலர் வீதிகளில் சென்றனர்.

சிந்து மாகாணத்தில் உள்ள ஹைதராபாதில் பட்டாசுகளை வெடித்து கொண்டாடினர். போர் நிறுத்த அறிவிப்பையே, வெற்றி பெற்றதாக கொண்டாடி வரும் பாக்.,கின் செயல், உலக நாடுகளால் வித்தியாசமாக பார்க்கப்படுகிறது. (ஐ)



### யாழ்ப்பாணம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வல்வெட்டித்துறையில் விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் இல்லத்துக்கு அருகில் உள்ள ஆலடிப் பகுதியில் இன்று கஞ்சி வழங்கப்பட்டது.

பல்கலைக்கழக மாணவர்களால் அந்தப் பகுதி மக்களிடம் அரிசி சேகரிக்கப்பட்டு முள்ளிவாய்க்கால் கஞ்சி காய்ச்சப்பட்டு சிரட்டைகளில் பொதுமக்களுக்கும், வீதியில் சென்றவர்களுக்கும் வழங்கப்பட்டது.

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை வார காலப் பகுதியை தமிழ் மக்கள் துக்க தினமாக அனுஷ்டிக்க வேண்டும் என்றும், கேளிக்கை ரீதியான நிகழ்வுகளையோ - நினைவுகூரலை அவமதிக்கும் வகையான செயற்பாடுகளை இந்தக் காலப்பகுதியில் தமிழ் மக்கள் தவித்துக்கொள்ள வேண்டும் என்றும் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கோரிக்கை விடுத்தது.

அதேவேளை, முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையை நினைவுகூர்ந்து எதிர்வரும் மே 18 ஆம் திகதி வரை வடக்கு, கிழக்கு தமிழர் தாயகமெங்கும் பயணித்து முள்ளிவாய்கால் கஞ்சியை வழங்க யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் ஏற்பாடு செய்துள்ளது.

### வெசாக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஜனாதிபதியின் பொதுமன்னிப்பின் கீழ் நாடு பூராகவும் 388 கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

சிறு குற்றங்களுக்காகமக் குறுகிய கால சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட கைதிகளே இவ்வாறு விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

அதில் யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் இருந்து 20 கைதிகள் இவ்வாறு விடுவிக்கப்பட்டுள்ளனர்.

கைதிகளை யாழ்ப்பாணம் சிறைச்சாலை அத்தியட்சகர் டி.ஐ.ஜெயவர்த்தன உள்ளிட்ட சிறைச்சாலை அதிகாரிகள் கைலாகு கொடுத்து வழியனுப்பி வைத்தனர்.

### தையிட்டியிலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)







இன்று திங்கட்கிழமை போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

போராட்டக் களத்தில் முள்ளிவாய்க்கால் கஞ்சி காய்ச்சப்பட்டு , போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு வழங்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் , முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டிருந்த நிலையில் , அவர்களுக்கும் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டது.

# வவுனியா சிறையில் இருந்து 7 கைதிகள் விடுதலை




வவுனியா, மே 12

வெசாக் தினத்தை முன்னிட்டு கணாதிபதியின் பொது மன்னிப்பின் அடிப்படையில் கைதிகள் விடுதலை இடம்பெற்ற நிலையில் வவுனியா சிறைச்சாலையில் இருந்தும் 7 கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர்.

சிறு குற்றங்களோடு சம்பந்தப்பட்ட 7 கைதிகள் இன்று இவ்வாறு விடுதலை செய்யப்பட்டனர்.

வவுனியா சிறைச்சாலை அத்தியட்சகர் பி. டபிள்யூ.எச். மதுசங்க தலைமையில் கைதிகள் விடுவிப்பு இடம்பெற்றது.

### வெசாக அலங்காரத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சிறுமியே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

உயிரிழந்த சிறுமி வெசாக் பண்டிகையை முன்னிட்டு தனது குடும்பத்தினருடன் இணைந்து வீட்டைப் பல வர்ண மின்குமிழ்களால் அலங்கரித்துக் கொண்டிருந்துள்ளார்.

பின்னர் இந்தச் சிறுமி பல வர்ண மின்குமிழ்களுக்கு மின்சாரத்தை வழங்க முயற்சித்தபோது மின்சாரம் தாக்கிக் காயமடைந்துள்ளார்.

காயமடைந்த சிறுமி பாதுக்கை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக ஹோமாகம ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பில் மொரகஹஹேன பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

### தையிட்டி விகாரைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

யாழ். தையிட்டியில் மக்களின் காணிகளை அடாத்தாகப் பிடித்து பௌத்த விகாரை நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், அந்தச் சட்டவிரோத விகாரைக்கு எதிராக காணி உரிமையாளர்கள் ஒவ்வொரு பௌர்ணமி தினத்திலும் எதிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடதக்கது.

இன்று போராட்டம் இடம்பெற்று வரும் நிலையில், அந்தப் பகுதியில் பெருமளவான பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர்.

# புனித வெசாக் தினத்தை முன்னிட்டு 388 கைதிகளுக்கு விசேட பொது மன்னிப்பு!

*புனித வெசாக் தினத்தை முன்னிட்டு இன்றையதினம் 388 கைதிகளுக்கு விசேட பொது மன்னிப்பு வழங்கப்படவுள்ளதாக சிறைச்சாலைகள் ஆணையாளரும் பேச்சாளருமான காமினி பீ திசாநாயக்க தெரிவித்துள்ளார்.*

*அதன்படி 4 பெண் கைதிகளும் 384 ஆண் கைதிகளும் விசேட பொது மன்னிப்பின் கீழ் விடுதலை பெறவுள்ளதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.*

*அபராதம் செலுத்தாததால் சிறைத்தண்டனை அனுபவிக்கும் கைதிகள், சிறு குற்றங்களுக்காக சிறைத்தண்டனையில் பாதி அல்லது அதற்கு மேற்பட்ட காலத்தை அனுபவித்த 65 வயதுக்கு மேற்பட்ட கைதிகள் இவ்வாறு எஞ்சிய தண்டனை காலம் இரத்து செய்யப்பட்டு விடுவிக்கப்படவுள்ளனர்.*

*அரசியலமைப்பின் 34 ஆவது பிரிவின் மூலம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி, குறித்த கைதிகள் விசேட பொது மன்னிப்பில் விடுவிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.*

# வயோதிபத் தம்பதி வீட்டில் படுகொலை

கம்பஹா, மே 12

கம்பஹா மாவட்டத்தில் கிரிந்திவெல பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கன்னிமஹர பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் படுகொலை செய்யப்பட்ட நிலையில் கணவரும், மனைவியும் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

கிரிந்திவெல, கன்னிமஹர பிரதேசத்தைச் சேர்ந்த 74 வயதுடைய கணவரும், 79 வயதுடைய மனைவியுமே மர்மமான முறையில் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களின் சடலங்கள் வத்துப்பிட்டிவல வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பான தீவிர விசாரணைகளை கிரிந்திவெல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# விடுவிக்கப்படாமல் உள்ள மக்கள் காணிகளில் இராணுவத்தினர் வெசாக் கொண்டாட்டம்!

*முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரம் ஆரம்பித்துள்ள நிலையில் வலி. வடக்கில் இராணுவத்தால் விடுவிக்கப்படாமல் உள்ள மக்கள் காணிகளில் இராணுவத்தினர் பெரும் விமரிசையாக வெசாக் கொண்டாட்டங்களை ஆரம்பித்துள்ளனர்.*

*இராணுவத்தினர் வசமுள்ள மக்கள் காணிகளை விடுவிக்கவேண்டும் என்று பல ஆண்டுகளாகக் கோரிக்கைகள் விடுக்கப்படுகின்ற போதும், பல்வேறு காரணங்களைக்காட்டி இராணுவம் காணிகளை விடுவிக்காது இழுத்தடித்து வருகின்றது.*

*இந்த நிலையில் குறித்த காணிகளில் இராணுவத்தினர் தற்போது வெசாக் கொண்டாட்டங்களை ஆரம்பித்துள்ளனர்.*

*அதன்படி பலாலி வடக்கில் துஃ254 கிராம அலுவலர் பிரிவில் உள்ள பொதுமக்களின் காணிகளிலும், பலாலி வடமேற்கில் துஃ255 கிராம அலுவலர் பிரிவில் உள்ள காணிகளிலும் வெசாக் கூடுகள் கொண்டு அலங்கரிக்கப்பட்டு வெசாக் கொண்டாட்டங்கள் விமர்சையாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன.*

*இந்தக் காணிகளுக்கு அருகில் வலி. வடக்கு பிரதேசசபைக்குச் சொந்தமான பொதுச் சந்தை ஒன்றும் உள்ளது. அதையும் இராணுவத்தினர் தற்போது வரை தங்களின் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கின்றனர்.*

*போரில் கொல்லப்பட்ட தங்களின் உறவுகளை நினைவுகூரும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரம் தமிழ் மக்களால் கடைப்பிடிக்கப்படும் நேரத்தில், இராணுவத்தினரால் வெசாக் கொண்டாட்டங்கள் விமர்சையாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன.*

*முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தைக்குழப்பி, திசைதிருப்பும் வகையிலேயே பௌத்த மக்கள் வாழாத, இன்னமும் படைக் கட்டுப்பாட்டில் இருக்கும் தமிழ் மக்களின் நிலங்களில் இவ்வாறு இராணுவத்தால் வெசாக் கொண்டாட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று தமிழ் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்*







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 12.05.2025 வெளியிடப்பெற்றது.